வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 12.05.2025 திங்கட்கிழமை இதழ் : 133 பக்கங்கள் : 12

## நுவரெலியா - கொத்மலையில்

# 100 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து 21 பேர் உயிரிழப்பு!

நுவரெலியா, மே 12

**வீதியை விட்டு விலகிய பேருந்து சுமார் 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்ததில் 21 பேர் உயிரிழந்தனர். குறைந்தது 57 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரியவருகிறது.**





நுவரெலியா - கம்பளை பிரதான வீதியில் கொத்மலை - இறம்பொடை - கெரண்டிஎல்ல பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இந்தப் பேருந்து நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவு 10.30 மணியளவில் கதிர்காமத்திலிருந்து மகியங்கனை ஊடாக குருநாகலுக்கு பயணமானது.

இந்த நிலையில், அதிகாலை 4.15 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றதாக பேருந்தில் பயணித்த பயணி ஒருவர் தெரிவித்தார். நீண்டதூரம் வாகனத்தை செலுத்தி வந்ததால் சாரதிக்கு 11

## குழந்தையை காப்பாற்ற தன்னுயிரை ஈந்த தாய்

### அன்னையர் தினத்தில் நெகிழ்வு சம்பவம்

நுவரெலியா, மே 12



கொத்மலையில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் தனது குழந்தையை காப்பாற்றப் போராடிய தாயின் காணொலிகள் சமூகவலைதளங்களில் பிரபலமாகின.

45 வயதான அந்தத் தாய் தனது 9 மாத குழந்தையைப் பிடித்துக்கொண்டு, அதைக் காப்பாற்ற 11

## மரணமானவர்களின் குடும்பத்துக்கு இழப்பீடு!

கொழும்பு, மே 12

கொத்மலையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 10 இலட்சம் ரூபா இழப்பீடாக வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதி நிதியத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

இறந்தவர்களின் உறவினர்களுக்கு உடனடியாக இந்த இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனிடையே, இலங்கை 11

## விபத்துகளை தடுப்பதற்கு நிரந்தர திட்டம் தயாராகிறது

### ஜனாதிபதி அநுர குமார

கொழும்பு, மே 12

நாட்டில் தினமும் அதிகரித்து வரும் வீதி விபத்துகள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்கான நிரந்தர திட்டத்தை வகுப்பதற்கு அரசாங்கம் தற்போது மும்முரமாக செயல்பட்டு வருகிறது - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கொத்மலையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக விடுத்த அனுதாப செய்தியிலேயே அவர் 11

## தமிழின படுகொலை நினைவுத்தூபி கனடாவில் நேற்றுமுன்தினம் திறப்பு

ரொறன்ரோ, மே 12



தமிழினப் படுகொலை நினைவுத்தூபி கனடாவின் பிரம்டன் நகரில் உத்தியோக பூர்வமாக நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலையை நினைவுகூரும் விதமாக பிரம்டன் நகரின் சிங்காவுசி பூங்காவில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியே நேற்று முன்தினம் சனிக் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் ஆரம்பமாவதை முன்னிட்டே 11

## முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரம் இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 12

முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் 4 கட்டங்களை கடந்து, இறுதியாக 2009 மே 18ஆம் திகதி முள்ளி வாய்க்காலில் மௌனித்தது. 11

## தமிழ் அரசு முன்னிலையிலுள்ள சபைகளில் அவர்களுக்கு ஆதரவு

### ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், மே 12

இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்னிலையில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் அவர்கள் ஆட்சி அமைப்பதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆதரவை வழங்கும் என்று அந்தக் கூட்டணியின் தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். 11

## தமிழின படுகொலை நடக்கவில்லை என்போருக்கு கனடாவில் இடமில்லை

### பிரம்டன் நகர முதல்வர் தெரிவிப்பு

ரொறன்ரோ, மே 12

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என்போருக்கு பிரம்டனில் இடமில்லை - கனடாவில் இடமில்லை - கொழும்புக்கு திரும்பிச் செல்லுங்கள் - இவ்வாறு பிரம்டன் நகர முதல்வர் பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

பிரம்டன் நகரில் தமிழின படுகொலை நினைவுத்தூபி திறப்பு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு 11

## ரயில் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, மே 12

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட 'யாழ் ராணி' ரயில் மோட்டார் சைக்கிளை மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணியளவில் பளை - கச்சாய்வெளி புகையிரத கடவையில் இந்த விபத்து இடம்பெற்றது. 11

## பயங்கரவாத தடை சட்டம் 3 மாதங்களில் நீக்கப்படும்

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 12

பயங்கரவாத தடை சட்டத்தை மூன்று மாதங்களுக்குள் நீக்குவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடை சட்டத்தை முழுமையாக 11

## வடக்கு, கிழக்கு அரசியல் தரப்புகள் எம்முடன் ஒன்றிணைய இணக்கம்!

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, மே 12

ஆளும் தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைந்து பயணிப்பதற்கு வடக்கு, கிழக்கு அரசியல் தரப்புகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டாட்சியை ஏற்படுத்துவது 11







பிரசித்தி பெற்ற வண்ணார்பண்ணை காமாட்சி அம்பாள் (நாச்சிமார்) ஆலயத்தின் பெருந்திருவிழாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழா நடைபெற்றவேளை...! (படம் - ஐ. சிவசாந்தன்)

# அரசியல் கைதி சிறை மாற்றம்; இன்று தீர்மானம் அறிவிக்கப்படும்!

## கஜேந்திரகுமார் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 12

அரசியல் கைதியான கிருபாகரன் திடீரென்று கொழும்பு மகசின் சிறைச்சாலையில் இருந்து அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட விடயம் சம்பந்தமாக இன்று திங்கட்கிழமை சிறைச்சாலை திணைக்களத்தின் தீர்மானம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்ப்பு உள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசியல் கைதியாக தொடர்ந்தும் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறவர்களில் ஒருவரான கிருபாகரன் என்பவர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் காரணமெதுவுமின்றி கொழும்பு மகசின் சிறைச்சாலையிலிருந்து அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

6 மாதங்களுக்கும் அதிகமாக அம்பாந்தோட்டை சிறைச்சாலையிலே வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிரான 4 வழக்குகளில் 3 வழக்குகள் கொழும்பில் நடைபெற்றுவரும் நிலையில் அவருடைய சட்டத்தரணி என்னுடன் தொடர்பு கொண்டார். அவர் சட்டத்தரணியாக முன்னிலையான தன்னுடைய கட்சிக்காரரான கிருபாகரனுக்கு சரியான வகையில் கடமையாற்ற முடியாதுள்ளதாகவும் கிருபாகரன் அம்பாந்தோட்டை சிறைச்சாலையில் உள்ள நிலையில் அவரை சென்று சந்தித்து அவருடன் கதைக்க முடியாமல் உள்ளதாகவும் என்னிடம் பலமுறை முறைப்பாடு செய்திருந்தார்.

கிருபாகரனுடன் நான் பேசிய போது அவரும் இதேபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். அந்தவகையில் - சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உபுல் தெனியவுடன் தொடர்புகொண்டு 6 மாதங்களுக்கு முன்னதாக இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

ஒழுக்காற்றுக்காகவே கிருபாகரன் அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அவருடைய தண்டனை காலம் நிறைவடைந்துள்ளதா என்பதை பார்த்து மீண்டும் அவரை கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு அழைத்து வருவதாகவும் கூறியிருந்தார். ஆணையாளர் அவ்வாறு கூறி மூன்று மாதங்கள் கடந்த நிலையில் கிருபாகரனை கொழும்புக்கு கொண்டு வருவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இது குறித்துப் பேச சிறைச்சாலை ஆணையாளரை தொடர்பு கொண்டபோதும் அதனை அவர் தவிர்த்தே வந்தார்.

இதன்பின்னர் சிறைச்சாலை அதிகாரி திஸநாயக்க என்பவரை சந்தித்திருந்தேன். சந்தித்து விடயங்களை தெரிவித்த போது அரசியல் கைதியான கிருபாகரனின் தண்டனை விடயங்கள் தொடர்பாக தனக்கு எதுவுமே தெரிவித்திருக்கவில்லை என்று குறிப்பிட்டதுடன், அவர் தொடர்பான கோப்புக்களை பார்த்து புலனாய்வு பிரிவால், வந்திருக்கும், அறிக்கையின் அடிப்படையில்தான் அவர் அம்பாந்தோட்டை சிறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார் எனக் கூறினார்.

கிருபாகரன் ஏன் இடமாற்றம் செய்யப்பட்டார்? என்பது குறித்து கிருபாகரனுக்கோ அல்லது அவரது சட்டத்தரணிக்கோ தெரிவித்திருக்கவில்லை. நீதிமன்றத்துக்கும் அறிவிக்கவில்லை.

அவரை மீளவும் கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு மீண்டும் கொண்டு வருமாறு கோரிக்கை முன்வைத்துள்ள நிலையில், இவ்விடயம் குறித்து ஆராய்ந்து திங்கட்கிழமை எனக்கு தெரியப்படுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# பேறுகால உளநலம் நூல் நேற்று வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 12

உலக அன்னையர் தினத்தில் அரும்பு நிலையம், யாழ். போதனா மருத்துவமனை இணைந்து வெளியிட்ட மருத்துவர் சிவசுப்பிரமணியம் சிவதாஸ் எழுதிய பேறுகால உள நலம் நூல் வெளியீடும் உலக அன்னையர் தின நிகழ்வு நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ். போதனா மருத்துவமனை தாய்மார்களின் பேறுகால உள நல நிபுணர் ஞானரூபன் கவி, கோகிலா மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இதில் பெண்கள் எதிர் கொள்ளும் பல்வேறு விதமான பிரச்னைகள் குறித்து விளக்க மளிக்கப் பட்டது. இதைத் தொடர்ந்து மருத்துவர் சிவ தாஸ் எழுதிய பேறுகால உள நல நூல் வெளியீடு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, குழந்தை நல நிபுணர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், மருத்துபீட மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# கருத்துரையும் கலந்துரையாடலும்

வடமராட்சி, மே 12

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் பௌர்ணமி தின கருத்துரையும் கலந்துரையாடலும் இன்று திங் கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவிலிலுள்ள தேசிய கலை, இலக்கிய பேரவையின் தலைமைப் பணிமனையில் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில், கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஆய்வு அலுவலர் வசந்தராஜ் "மக்களின் ஐக்கியமும் விழிப்புணர்வும் இன்றி பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு சாத்தியமா? " எனும் தொனிப் பொருளில் ஆய்வு கருத்துரை வழங்கவுள்ளார்.

நிகழ்வில் தொடக்கவுரையை தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க. தணிகாசலம் வழங்குவார். கருத்துரை முடிவில் சபையோர் கலந்துரையாடல் நடைபெறும். (ஐ-02)

# யாழ்ப்பாணத்து தமிழில் பேசி, நடித்ததில் மகிழ்ச்சி!

## தென்னிந்திய நடிகர் பாஸ்கர்

யாழ்ப்பாணம், மே 12




"யாழ்ப்பாணத் துக்கு வந்து, இங்கே உருவாகும் குறும் படத்தில் யாழ்ப்பாணத் தமிழ் பேசி நடித்தமை மகிழ்ச்சியை தந்துள்ளது", என தென்னிந்திய திரையுலக பிரபல நடிகர் எம். எஸ் பாஸ்கர் தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய நடிகர் எம். எஸ். பாஸ்கர் கர்மா என்ற குறும் படத்தில் நடிப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். இவர், நேற்று யாழ். ஊடக அமையத்தில் சந்திப்பு ஒன்றை நடத்தியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் இருந்து 42 கடல் மைல் தூரத்தில் உள்ள வேதாரணியம் அருகில் உள்ள முத்துப்பேட்டை எனும் ஊரே எனது ஊர். எங்கள் ஊருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் நிறைய தொடர்புகள் உள்ளன. வல்வெட்டித்துறையை சேர்ந்தவர்கள் எமது ஊரில் வசித்துள்ளனர். எனது அப்பாவுக்கும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களுக்கும் இடையில் நிறைய தொடர்புகள் இருந்தன

எனது ஊரை ஒத்த கலாசாரம் , உணவு பழக்கவழக்கம் தான் இங்கே காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் உணவகங்களில் உணவருந்தாமல் பட உருவாக்க குழுவினரின் வீட்டில் உணவருந்தியமையால் எங்கள் வீட்டு சுவையுடன் உணவருந்தியது போன்றிருந்தது. அது மட்டுமின்றி இங்குள்ளவர்கள் தமிழ் மொழி பேசுவதால் , வேறு நாட்டில் இருக்கும் எண்ணம் இல்லாமல் எங்கள் ஊரில் இருப்பது போன்றே இருந்தது.

யாழ்ப்பாண பேச்சு வழக்கு மொழியில் பேசி நடித்து இருக்கிறேன். ஒரு குழந்தை எவ்வாறு பேச கற்றுக்கொண்டு பேசும் போது , ஏற்படும் சந்தோசம் போன்று யாழ்ப்பாண பேச்சு வழக்கை கேட்டு அவ்வாறே பேசும்போது ரொம்ப சந்தோசமாக இருந்தது. இந்த வயது முதிர்ந்த குழந்தை நன்றாகவே யாழ்ப்பாண பேச்சு வழக்கை பேசி இருக்கிறது என நம்புகிறேன்.

ஈழத்தின் கதைகளை தென்னிந்திய திரைப்படங்கள் போதுமானதாக எடுத்து செல்கிறது என இங்குள்ளவர்கள் நினைத்தால் , அந்த இயக்குநர்களை பாராட்டுங்கள். போதுமானதாக இல்லாமல் இருந்தால் அந்த இயக்குநர்களுக்கு உங்கள் சமூக வலைத்தளங்கள் மூலமாக எடுத்து கூறுங்கள் அதன் ஊடாக ஈழக்கதைகளை திறமையாக எடுத்து செல்ல சொல்லுங்கள் - என்றார். (ஐ)

# மன்னாரில் யானைகளால் தென்னை மரங்கள் அழிப்பு



மன்னார், மே 12

மன்னார் பரப்புக்கடந்தான் கிராமத்துக்குள் நுழைந்த யானைகள் அங்கிருந்த பயன் தரு தென்னை மரங்களை முறித்து அழித்துச் சென்றுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு கிராமத்துக்குள் நுழைந்த யானைகள் மரங்களை அழித்துச் சென்றுள்ளன.

தொடர்ச்சி யாக நடக்கும் இவ்வாறான சம்பவங்களால் விவசாய நடவ டிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாக மக்கள் கூறு கின்றனர்.

அத்துடன், யானை வேலி அமைத்துத் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.05.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## போரில்லா உலகு

புதிய திருந்தந்தையாக தெரிவாகியிருக்கும் 14ஆம் லியோ, "இனிப் போர் வேண்டாம்", என்று தெரிவித்திருக்கிறார். திருத்தந்தை ஓர் அமெரிக்கர். அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். 69 வயதான றொபேர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட், ஓர் அமெரிக்கராக இருந்த போதும் அவர் ஓர் இலத்தீன் அமெரிக்க கர்தினாலாகவே அதிகம் அறியப்பட்டிருக்கிறார். ஏனெனில், நீண்டகாலமாக இலத்தீன் அமெரிக்க நாடான பெருவிலேயே தனது திருப்பணியை மேற்கொண்டிருந்தார். ஆனாலும், பெருவில் திருப்பணியாற்றியவாறே தனது சொந்த அமெரிக்க நகரமான சிகாகோவுக்கு சென்று அங்கும் திருப்பணிகளை ஆற்றிவந்தார்.

திருத்தந்தைகள் போருக்கு எதிராகவே இருப்பார்கள். அப்படித்தான் இருக்கவும் வேண்டும். அந்த வகையில் புதிய திருத்தந்தை போரில்லாத உலகுக்காக வல்லரசுகளுக்கு அழைப்பு விடுத்திருப்பதானது ஆச்சரியமான ஒன்றல்ல. அவர் இவ்வாறு கூறுகின்றபோதே இரண்டு யுத்தங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

இதேபோன்று, ஆபிரிக்க நாடுகளில் சர்வாதிகார ஆட்சிகளும் பயங்கரவாதத் தாக்குதல்களும் நடந்த வண்ணம்தான் இருக்கின்றன. மனிதகுல வரலாறு முழுவதும் யுத்தங்களின் வரலாறுதான். இரண்டு உலக மகா யுத்தங்களுக்கு பின்னரான உலகம்தான் தற்போதைய உலகம். ஆனாலும், யுத்தங்கள் நின்றுவிடவில்லை - அது ஒருபோதும் நின்றுவிடப் போவதுமில்லை. யுத்தங்கள் இல்லாத உலகத்தை விரும்பலாம் - அதுதான் மனித குலத்தின் விருப்பமும் கூட. யுத்தங்களில் எப்போதும் சாதாரண மக்களே பலியாகின்றனர். ஆனாலும், பெரும் இழப்புகளை கண்ட பின்னரும் யுத்தங்களுக்கான அரசியல் சூழல் இல்லாமல் போய்விடவில்லை.

ஒருபுறம் அதிகாரப் போட்டியாகவும் இன்னொரு புறம் நாகரிகங்களுக்கு இடையிலான மோதலாகவும் யுத்தங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. முன்னர் எப்போதுமில்லாதவாறு இஸ்லாமிய கருத்தியலை உயர்த்திப் பிடிக்கும் பயங்கரவாத அமைப்புகள் பல்கிப் பெருகிவருக்கின்றன. அதன் விளைவாகத்தான் இந்திய - பாகிஸ்தான் யுத்த பதற்றம் ஏற்பட்டது. இஸ்லாமியர்கள் அல்லாதவர்களை, குறிப்பாக மேற்குலகத்தவர்களை கொல்லுதல் என்னும் வெறிச் சிந்தனையுடன் அமைப்புகள் பல்கிப் பெருகி வருகின்றபோது, யுத்தங்கள் இல்லாத உலகு எவ்வாறு சாத்தியப்படப் போகிறது? பின்லேடன்களும், அபூபக்கர் பக்காதிகளும் உருவாகிக் கொண்டிருந்தால் யுத்தங்களும் கருக்கொண்டு கொண்டேதான் இருக்கும்.

அதிகாரப் போட்டியை அடிப்படையாகக் கொண்டிருக்கும் நவீன உலகில் யுத்தங்களை தடுப்பதற்கு எந்தவொரு கட்டமைப்பும் இல்லை. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர், ஒரு மூன்றாவது யுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கிலேயே ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது ஆனால், ஐக்கிய நாடுகள் சபையால் எந்தவொரு யுத்தத்தையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்த முடியவில்லை. போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை. ருவாண்டா தொடக்கம் இலங்கை வரையில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடுகள் தோல்வியின் நீட்சியாகவே தொடர்கிறது. இந்த நிலையில் திருத்தந்தையின் அறிவிப்பு என்ன தாக்கத்தை ஏற்படுத்திவிடப் போகின்றது? எனினும் யுத்தங்கள் இல்லாத உலகுதான் அனைவரினதும் கனவாகும். ஆனாலும், அக்கனவு பலிப்பதில்லை என்பதுதான் உலக அரசியல் யதார்த்தமாகும்.

## மகப்பேறு கால உளநலம் குறித்த விழிப்புணர்வு நடைபவனி யாழில்

யாழ்ப்பாணம், மே 12

மகப்பேறு கால உளநலம் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி நேற்றுக் காலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக ஆரம்பமாகி, மணிக்கூட்டு கோபுர வீதி ஊடாக யாழ். பொது நூலகம் வரை சென்று நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் விசேட நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் பொருண்மியம் ஆசிரியர் ஞானரூபன் கவி கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கோகிலா மகேந்திரன் கலந்து கொண்டார். மகப்பேறு காலத்தில் பெண்களின் உளநலம் தொடர்பான கருத்தாடல்கள் மற்றும் புத்தக வெளியீடு என்பன நடைபெற்றன. யாழ் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, மருத்துவர்கள் மற்றும் பயிற்சி தாதிய மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

## அடாவடித்தனங்கள் உடன் நிறுத்தப்படவேண்டும்

### ரவிகரன் எம்.பி. வேண்டுகோள்

முல்லைத்தீவு, மே 12

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் தமிழ் மக்களின் பூர்வீக வயல் நிலங்களில், பயிர்ச்செய்கை நடவடிக்கைக்காக பண்படுத்தல் செயல்பாட்டில் தமிழ் மக்கள் ஈடுபட்டபோது கல்கமுவ சாந்தபோதி தேரர், தொல்லியல் திணைக்களத்தினரின் முறைப்பாட்டுக்கமைய முல்லைத்தீவு பொலிஸார் மூவரை கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரையும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பொலிஸ் நிலையம் சென்று சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன், தமிழ் மக்கள் தமது பயிர்ச் செய்கை நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் சுதந்திரம் மறுக்கப்படக் கூடா தெனவும், இத்தகைய அடாவடித்தனமான செயல்பாடுகள் உடனடியாக நிறுத்



தப்படவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைப்குதியில் தமது வயல் காணிகளை பண்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட சாமித்தம்பி ஏகாம்பரம், சிறீரத்தினம் கஜரூபன், வரதன் இளமாறன் ஆகிய மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொல்லியல் திணைக்களத்தின் எல்லைக்கல் இடப்பட்ட பகுதிகளுக்குள் பண்படுத்தல் செயல்பாடு மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அறிந்தவுடன் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு சென்று கைது செய்யப்பட்ட மூன்று பேருடனும் கலந்துரையாடியிருந்தேன்.

அத்தோடு பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடியதில், தமக்கு வவுனியாவிலிருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகவும், தொல்லியல் திணைக்களத்தின் பகுதிக்குள் பண்படுத்தல் செயல்பாட்டில் ஈடுபட்டதற்காகவே குறித்த மூவரையும் கைது செய்ததாக கூறினார்.

அத்தோடு கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி விடுவிப்பதற்குரிய நடவ டிக்கை எடுக்கப்படும். இருப்பினும் இந்தக் காணிகள் அனைத்தும் அந்த மக்களுக்குரிய காணிகள் என்பதை பொலிஸ் பொறுப்பதிகாரிக்குத் தெளிவுபடுத்தினேன் என ரவிகரன் எம். பி. தெரிவித்தார். (எ)

## மாற்றுத்திறனாளியின் குடும்பத்துக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் புதிய வீடு

வவுனியா, மே 12

வவுனியா வடக்கு கனகராயன்குளம், பெரியகுளம் கிராமத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளியின் குடும்பம் ஒன்றுக்கு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் வீடு ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டது.

தங்கோடை காரை நகரைச் சேர்ந்த அமரர்களான கனகலிங்கம்- பத்மாவதி நினைவாக அவர்களின் குடும்பத்தினரால் வழங்கப்பட்ட 19 இலட்சத்து 50, 000 ரூபாய் நிதியில் குறித்த வீடு அமைத்து கொடுக்கப்பட்டது.

இந்த வீடு நேற்று மதியம் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள், வீட்டுத்திட்டத்துக்கான நிதிப்பங்களிப்பாளர் ஆகியோரால் சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 12 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 29
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : பௌர்ணமி




**மேடம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். மனைவி வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகளுக்கு உதவுவீர்கள்.

**இடபம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்க கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புவியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உயரதிகாரி பாராட்டும் படி நடந்து கொள்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
ஒரு விஷயத்தை அதிக அளவில் நினைத்து குழப்பம் அடைவீர்கள். சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். போராடி வெல்லும் நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். உத்யோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். சிறப்பான நாள்.

**மகரம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். வியாபாரத்தில் லாபம் உயரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

# அனலைதீவில் விசேட மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம், போதனா மருத்துவமனை மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஆகியவற்றின் அனுசரணையுடன், அனலைதீவு மருத்துவமனையில் விசேட மருத்துவ முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, நூற்றுக்கணக்கானவர்கள் விசேட மருத்துவ நிபுணர்களைச் சந்தித்து, தங்களுடைய நோய் நிலைகளுக்கான சிகிச்சைகளையும், தொடர்ந்து மேலதிக சிகிச்சை பெறுவதற்கான வழிமுறைகளையும் பெற்றுள்ளனர்.



இந்த மருத்துவ முகாமுக்கு யாழ். பிராந்திய கடற்படைத் தலைமையகம், கனடா அனலைதீவு ஒன்றியம் மற்றும் பல அமைப்புகள் அனுசரணை வழங்கியிருந்தன. (எ)





# வவுனியாவில் சிறி சபாரட்ணத்தின் 39ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு

வவுனியா, மே 12

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் சிறி சபாரட்ணத்தின் 39 ஆவது நினைவு தினம் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, சிறி சபாரட்ணத்தின் படத்துக்கு தீபம் ஏற்றி, மலர்மாலை அணிவித்து, மலர்தூபி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுபபினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், சிவசக்தி ஆனந்தன், வினோ நோதராதலிங்கம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி, வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் உள்ளிட்ட பலரும், மதகுருமார், கட்சி உயர்பீட உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-10)







யாழ்ப்பாணம், சுழிபுரம் மூளாய் வதிரன்புலோ சிறீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வெகு சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்: - தில்லைநாதன்)

# “பிரமன் சிரம்கொய்த வைரவர்” சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 12

சங்கானை சிலம்புப் புளியடி ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தில் இன்று திங்கட்கிழமை இரவு 07.00 மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் சைவப்புலவர் செ. த. குமரன் “பிரமன் சிரம்கொய்த வைரவர்” என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு சைவ சமய அறிவுப் போட்டி நடைபெறவுள்ளது. அத்தோடு, வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில் வழங்கப்படவுள்ளது.

(எ)





யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு சென். பிலிப் நேரிஸ் ஆலய வருடாந்த முதல் நன்மை திருப்பலி மற்றும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன. (படங்கள் :- சுஜிந்தன்)

# இன்சுலின் தட்டுப்பாடு நிவர்த்திக்கப்பட்டுள்ளது

கொழும்பு, மே 12

நாட்டில் நிலவிய இன்சுலின் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது.

நாட்டில் பயன்படுத்தப்படும் 2 வகையான இன்சுலின்களுக்கு தட்டுப்பாடு நிலவியதாக பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்தார். இந்த 2 வகை இன்சுலின்களும் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

மருத்துவமனைகளில் இன்சுலின் தட்டுப்பாடு ஏற்பட்டால் அவற்றை திறந்த சந்தையில் கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள இன்சுலின் கையிருப்பு எதிர்வரும் ஜூன் மாதம் வரை போதுமானது - என்றும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# மேன்முறையீட்டு நீதியரசர்களாக நால்வரின் பெயர் முன்மொழிவு!

கொழும்பு, மே 12

மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வெற்றிடமாக உள்ள இரண்டு நீதியரசர் பதவிகளை நிரப்புவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் 4 பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான பிராங்க் குணவர்தன, ஆதித்ய குமார பட்டபெந்தி, நவரட்ண மாரசிங்க ஆகியோரின் பெயர்களை பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ முன்மொழிந்துள்ளார்.

இதேநேரம், துணை மன்றாடியார் நாயகம் ரியாஸ் பாரியின் பெயரை சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க முன்மொழிந்துள்ளார்.

இந்த 4 பெயர்களில் இரண்டை ஜனாதிபதி அரசமைப்பு பேரவையின் ஒப்புதலுக்கு அனுப்பவுள்ளார்.

மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நிஸங்க பந்துல கருணாரத்ன, பதில் தலைவர் முகமது லஃபார் ஆகியோர் 63 வயதை எட்டுகின்றனர். இவர்கள் அடுத்த மாதம் ஓய்வு பெறவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வர்த்தகரை ஏமாற்றி ரூ. 28 கோடி கொள்ளை

கொழும்பு, மே 12

தங்கக்கட்டிகளை விற்பனை செய்வதாக வர்த்தகர் ஒருவரை ஏமாற்றி 28 கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, லண்டனை சேர்ந்த இலங்கையர் ஒருவர் கொழும்பிலுள்ள வர்த்தகர் ஒருவரை அணுகி 5.5 கிலோ எடை கொண்ட தூய தங்கம் விற்பனைக்கு இருப்பதாகவும் அதற்கு பொருத்தமான நபரை தேடுவதாகவும் கூறியுள்ளார்.

சில மாத பேச்சுகளை தொடர்ந்து அந்தத் தங்கத்தை 28 கோடி ரூபாய்க்கு வாங்குவதற்கு வர்த்தகர் ஒப்புக்கொண்டுள்ளார்.

தங்கத்தை விற்பனை செய்வதாகக் கூறியவர்கள் அதனை வாங்க சம்மதித்த வர்த்தகரையும் அவரின் புதல்வரையும் மட்டும் தனியாக ஓரிடத்துக்கு அழைத்துள்ளனர்.

பணத்து டன், அங்கு சென்றவர்களை தாக்கி கை, கால்களை கட்டி விட்டு 28 கோடி ரூபாய் பணத் துடன் அந்தக் கும்பல் தப்பிச் சென்றது.

அங்கிருந்து தப்பிய வர்த்தகரும் அவரின் புதல்வரும் இது குறித்து பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

பணத்தை கொள்ளையடித்த நால்வர் குழு தலைமறைவாகி யுள்ளது. மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பல வருடங்கள் கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிக்காத புகையிரத திணைக்களம்!

கொழும்பு, மே 12

பல வருடங்களாக கணக்காய்வு அறிக்கைகளை முறையாக சமர்ப்பிப்பதற்கு புகையிரதத் திணைக்களம் தவறியுள்ளது என்று கோபா குழு முன்னிலையில் தெரியவந்தது.

இதன் போது கருத்து தெரிவித்த கோபா குழு தலைவர்,

புகையிரதத் திணைக்களத்தின் செயல்திறன் மிகவும் மோசமாக இருக்கிறது. கணக்காய்வாளர் கடந்த 5 வருடங்களாக கணக்காய்வு முகாமைத்துவ குழு கூடவில்லை. கணக்காய்வு விசாரணைகளுக்கு முறையாக பதிலளிக்கப்படவில்லை. கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கள் இல்லாததால், இந்தப் பிரச்னைகளைப் பற்றி விவாதித்து சரிசெய்வதற்கான வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது.

புகையிரதத் திணைக்கள முகாமையாளர், இந்த வருடம் இந்த 4 கூட்டங்களையும் நடத்துவதாக உறுதியளித்துள்ளார். வருடாந்திர கணக்காய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்தில்கூட சமர்ப்பிக்கப்படவில்லை. இது பாரதூரமான பிரச்னையாகும். 27 கணக்காய்வு தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கப்படவில்லை - என்றார். (ஐ)

# மாகாண சபை தேர்தலை அரசு விரைவில் நடத்தாது!

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மே 12

**அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை வெகுவிரைவில் நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு எதிர்மறையானதாக உள்ளதால் பிறிதொரு தேர்தலை நடத்தும் தீர்மானத்தை அரசாங்கம் தற்போது எடுக்காது - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.**



சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் குழு கூட்டம் அவரின் இல்லத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் சமகால அரசியல், பொருளாதாரம், சமூக நிலவரம் குறித்து இதன் போது ஆராயப்பட்டது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் எழுச்சி பெற்றுள்ளமை தொடர்பில் பேசப்பட்டுள்ளது. கட்சியின் எழுச்சிக்காக தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாராட்டினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், "மக்கள் மத்தியில் செயல்பாட்டு ரீதியாலான அரசியலில் ஈடுபடுங்கள். மக்களுடனான நெருங்கிய தொடர்புதான் அரசியல் இருப்பைப் பலப்படுத்தும். மக்களின் அடிப்படை பிரச்னைகளை முன்னிலைப்படுத்தி பலமான எதிர்க்கட்சியாக செயல்படுங்கள்" என்றும் தனது கட்சியினருக்கு அவர் அறிவுறுத்தினார்.

மாகாண சபைகள் தேர்தலை இந்த அரசாங்கம் வெகு விரைவில் நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு எதிர்மறையானதாக உள்ளதால் பிறிதொரு தேர்தலை நடத்தும் தீர்மானத்துக்கு அரசாங்கம் தற்போது வராது - என்றும் கூறினார். (ஐ)

# முட்டை விலை வீழ்ச்சி!



கொழும்பு, மே 12

சந்தையில் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. பல பகுதிகளில் முட்டையின் விலை 20 ரூபாய் முதல் 24 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

60 ரூபாய் முதல் விற்பனையான முட்டை பல மாதங்களுக்கு பின்னர் குறைவடைந்துள்ளது.

எனினும், அண்மை நாட்கள் வரை 28 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை முட்டையின் விலை காணப்பட்டதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மே 12

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் - நொச்சியா கம பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் அதே இடத்தைச் சேர்ந்த 36 வயது நபராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மதத்தை வைத்தும் அரசு அரசியல் செய்கின்றது!

## பொதுஜன பெரமுன கட்சி சாடல்

கொழும்பு, மே 12



தற்போதைய அரசாங்கம் மதத்தை வைத்தும் அரசியல் செய்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

"சட்டம் வளைந்து கொடுக்கும் யுகம் முடிவுறுத்தப்படும் என்ற வாக்குறுதியை வழங்கியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆனால், தற்போது சட்டம் வளைக்கப்படும் விதத்திலான செயல்பாடுகளே மேற்கொள்ளப்படுகின்றன. தம்முடைய கட்சி சார்ந்தவர்களுக்கு ஒரு வகையிலும் கட்சி சாராதவர்களுக்கு ஒரு வகையிலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டம் நாட்டில் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

இதேபோன்று வெசாக் பண்டிகை என்பது தேசிய விடுமுறை தினமாகும். ஆனால், இதுவரையில் சதொசவில் தொழில் புரியும் பௌத்த ஊழியர்களுக்கு இன்னமும் விடுமுறை வழங்கப்படவில்லை என்பது கவலையளிக்கும் விடயமாகும். தேர்தலுக்கு முன்னர் தந்த தாதுவை பார்வையிட அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டது. அந்த வகையில் மதத்தையும் அரசியலுக்கு பயன்படுத்தும் விடயத்தை அரசாங்கம் மேற்கொள்கின்றமை தெளிவாகிறது - என்றார்.

# வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடு தளர்வால் இறக்குமதியாளர் நன்மை!

கொழும்பு, மே 12

இடைநிறுத்தப்பட்டிருந்த இறக்குமதி கட்டுப்பாடுகள் 4 வருடங்களுக்கு பின்னர் தளர்த்தப்பட்டமையால் வாகன இறக்குமதியாளர்கள் நன்மையடைந்து வருகின்றனர்.

இதற்கமைய தற்போது எச்சரிக்கையுடன் இறக்குமதி நடவடிக்கைகளை படிப்படியாக அதிகரித்து வருவதாக இலங்கை மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுகர்வோருக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதனால் இந்த தொழில்துறையின் முக்கிய பிரிவுகளில் படிப்படியாக மீண்டும் செயல்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், சர்வதேச ரீதியாக முன்னணியில் உள்ள வாகன உற்பத்தியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள் இறக்குமதி தளர்த்தப்பட்டமை வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்துள்ள போதிலும், வாகன சந்தை நுட்பமான கட்டத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

வாகன சந்தை நுட்பமான மீட்சி கட்டத்தில் உள்ளதனால், அவதானமாகச் செயல்பட வேண்டியது அவசியம் என இலங்கை மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# டெங்கு, சிக்குன்குனியா பரவல்; சுகாதார அமைச்சு விசேட திட்டம்!

## டெங்கு அபாய வலயத்தில் மட்டக்களப்பு

கொழும்பு, மே 12

**டெங்கு, சிக்குன்குனியா நோய்கள் பரவல் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நோய்களை கட்டுப்படுத்துவதற்கு நீண்ட மற்றும் குறுகிய காலத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 18 ஆயிரத்து 749 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தளை, மாத்தறை, காலி, இரத்தினபுரி, கண்டி ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாயம் மிக்க மாவட்டங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த சில மாதங்களாக நாட்டின் பல பகுதிகளில் சிக்குன்குனியா நோய் பரவல் அதிகரித்துள்ளது. நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிந்து அதனை சுத்தமாக வைத்திருப்பதுடன், நுளம்பு கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் உடல் முழுவதையும் மூடும் வகையிலான ஆடைகளை அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி, குமட்டல் மற்றும் வாந்தி, தோலில் சிவப்பு புள்ளிகள் மற்றும் இரத்தப்போக்கு ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடுமாறும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# ரூ. 6 கோடி பெறுமதியான சிகரெட்கள் கைப்பற்றல்!

கொழும்பு, மே 12

6 கோடி ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் சந்தேகநபர்கள் நால்வர் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

அண்மையில், கைப்பற்றப்பட்ட சிகரெட்களில் அதிக தொகை இதுவாகும் என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

எமிரெட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் டுபாயிலிருந்து கட்டுநாயக்கா வந்த விமானத்திலேயே இந்த சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன.

கொழும்பின் பம்பலப்பிட்டி, வெல்லம்பிட்டி, தெமட்டகொடை, கொஸ்வத்தை பகுதிகளை சேர்ந்த 25 - 30 வயதுக்கு இடைப்பட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் கொண்டுவந்த 20 பயணப் பைகளில் இருந்து இந்த சிகரெட்கள் மீட்கப்பட்டன. (ஐ)

# வெள்ளவத்தையில் மாடியிலிருந்து தவறிவிழுந்தவர்

கொழும்பு, மே 12

9ஆவது மாடிக் கட்டடத்துக்கு பெயின்ற் செய்து கொண்டிருந்தவர் தவறிவிழுந்து உயிரிழந்தார்.

கொழும்பு - வெள்ளவத்தை - சார்லிமன் வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், மொறட்டுவையை சேர்ந்த 44 வயது நபரே உயிரிழந்தார். மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்திய தூதுவர் - நாமல் சந்திப்பு

கொழும்பு, மே 12

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த சந்திப்பின்போது இந்தியா, இலங்கைக்கு இடையிலான கூட்டாண்மையின் புதுப்பிப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# விமானத்தில் கைவரிசை காட்டிய சீன பிரஜை கைது

கொழும்பு, மே 12

12 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களை திருடினார் என்ற குற்றச்சாட்டில் 54 வயதான சீனப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்த விமானத்திலேயே இந்தச் சம்பவம் இடமத்பெற்றுள்ளது.

விமானத்தில் பயணித்த இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த 81 வயதான அமெரிக்க கத்தோலிக்க பாதிரியார் ஒருவரிடமே இந்தப் பணம் திருடப்பட்டது.

விமானம் அபுதாபியிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே சீன நாட்டவர் பாதிரியாரின் சூட்கேஸிலிருந்து பணத்தைத் திருடிச் சென்றார்.

இது குறித்து விமான போக்குவரத்து அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, சந்தேகநபர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். (ஐ)

# ஆற்றிலிருந்து சடலம் மீட்பு!

கொழும்பு, மே 12

களனி ஆற்றிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. பேலியகொடை பொலிஸ் பிரிவிலேயே இந்த சடலம் மீட்கப்பட்டது. சடலத்துக்கு உரியவர் அடையாளம் காணப்படவில்லை.

உயிரிழந்தவர் 45 முதல் 55 வயதுக்கு இடைப்பட்ட ஆண் எனவும், சுமார் 5 அடி 8 அங்குல உயரமும் சராசரி உடல் அமைப்பும் கொண்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கொழும்பு பொலிஸ் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# விபத்துக்கு உள்ளான ஹெலி இறுதி போரில் பங்கேற்றதாம்

## மீட்கப்பட்ட பாகங்கள் கொழும்புக்கு



கொழும்பு, மே 12

மாதுறுஓயா நீர்த்தேக்கத்தில் விழுந்து விபத்துக்குள்ளான பெல் 212 ஹெலி வன்னி இறுதிப் போரில் பயன்படுத்தப் பட்டது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, நீர்த்தேக்கத்தில் விழுந்த ஹெலிகொப்டரின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றை, கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்துக்குக் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட ஹெலியின் பாகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன என்று விமானப் படை பேச்சாளர் குறூப் கப்டன் எரந்த கீகனகே தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளான ஹெலியின் பாகங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை, பொலநறுவை - மாதுறு ஓயாவில் அவசரமாக தரையிறக்கப்பட்ட ஹெலிகொப்டர் நீர்த்தேக்கத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், 6 படைசிப்பாய்கள் உயிரிழந்தனர். 6 பேர் காயங்களுக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீட்டியகொடை இரட்டை கொலை மேலும் ஒரு சந்தேகநபர் கைது!

கொழும்பு, மே 11

மீட்டியகொடை இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டபோது அவரிடமிருந்து 5 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்டியகொடையில் கடந்த 3ஆம் திகதி ரி -56 ரக துப்பாக்கியால் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் 28 வயதான நபர் ஒருவர் மீட்டியகொடை - எரணவில பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். (ஐ)

# தேர்தல் செலவு அறிக்கையை வேட்பாளர்கள் வழங்கவேண்டும்

கொழும்பு, மே 12

நடந்து முடிந்த 2025 உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் தேர்தல் செலவின ஒழுங்குமுறைச் சட்டம் எண் 03இன்படி எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் தங்கள் பிரசார வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகளிடம் தங்கள் அறிக்கைகளை வழங்க வேண்டும்.

தேர்தல் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க கூறியுள்ளார்.

# வீதியை கடந்தவர் விபத்தில் மரணம்!

கொழும்பு, மே 12

பாதசாரி கடவையில் வீதியை கடந்த பெண்ணை கார் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கொழும்பு - பிலியந்தலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 51 வயது பெண்ணே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் களுபோவில மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. பிலியந்தலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

கொழும்பு தமிழ் மாணவி விவகாரம்:

# மாணவியின் பெற்றோர், விசாரணை அதிகாரிகளுடன் பிரதமர் சந்திப்பு!



கொழும்பு, மே 12

**ஆசிரியரின் பாலியல் துன்புறுத்தலை தொடர்ந்து தவறான முடிவு எடுத்து உயிரிழந்த மாணவியின் பெற்றோர், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தும் பொலிஸ் அதிகாரிகளை பிரதமர் ஹரிணி அமரசூரிய சந்தித்தார்.**

இந்த சந்திப்பு பிரதமர் பணிமனையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த சந்திப்பில் சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் மற்றும் பல அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இதன்போது, சிறுமியின் மரணத்துக்குக் காரணமாகக் கூறப்படும் பாடசாலை, தனியார் கல்வி நிலையத்தில் நடந்த சம்பவங்கள் குறித்து விரைவா - நியாயமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு பிரதமர் அறிவுறுத்தினார்.

சம்பவம் பதிவான தருணத்திலிருந்து பொருத்தமான நடைமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்பட்டனவா என்பதை மதிப்பிடுவதற்காக கல்வி அமைச்சு தற்போது ஓர் உள்ளக விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

மேலும், இதுபோன்ற சம்பவங்களுக்கு பதிலளிப்பதற்கு பொறுப்பான அரச நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க, சிறுவர் நல மருத்துவ நிபுணர் அஸ்வினி பெர்னாண்டோ தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஹஜ் புனித யாத்திரைக்காக முதல் குழு சவூதி பயணமானது



கொழும்பு, மே 12

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக சவூதி அரேபியாவுக்கு நாட்டிலிருந்து பயணமான முதல் ஹஜ் குழுவை வழியனுப்பும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி கலந்து கொண்டு ஹாஜிகளை வழியனுப்பி வைத்தார். இதன் போது கருத்து தெரிவித்த சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி,

"இரு புனித மஸ்ஜித்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவூத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் சவூதி அரேபிய அரசாங்கம், ஹஜ்ஜுக்காக வரும் அல்லாஹ்வின் விருந்தினர்களுக்குப் பணியாற்றுவதில் முழு மொத்த பங்களிப்பையும் தவறவிடாமல் செயல்பட்டு வருகிறது.

"ஹஜ் யாத்திரிகர்கள் சவூதிக்குள் வந்ததிலிருந்து தத்தமது நாட்டுக்கு திரும்பும் வரை அனுபவிக்கும் நலன், பாதுகாப்பு மற்றும் வசதிகளை உறுதிப்படுத்துவதற்கு நாட்டின் அனைத்து வளங்களையும் சவூதி அரசாங்கம் பயன்படுத்துகிறது. இந்த ஆண்டு ஹஜ் கடமைக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் சவூதி அரேபிய இராச்சியத்துடன் தொடர்புடைய நிறுவனங்களால் முழுமையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

புனித ஹஜ் பயண ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்புகள் சிறப்பாக நடைபெறுவதற்காக, சவூதி அரேபிய இராச்சியம் மற்றும் இலங்கையின் அதிகாரிகள் வழங்கிய பயனுள்ள ஒத்துழைப்புக்கு இதயம் கனிந்த பாராட்டுகளையும் தெரிவிக்கிறோம். இந்த ஒத்துழைப்பு, எமது இரு நாடுகளுக்கு இடையிலான உறுதியான மற்றும் நட்பான உறவுகளை பிரதிபலிப்பதாக அமைகிறது - என்றார். (ஐ)

# வெசாக் தினத்துக்காக 8,500 தானசாலைகள்!

கொழும்பு, மே 12

வெசாக் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் 8 ஆயிரத்து 581 தான சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தான சாலைகள் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், வெசாக் பூரணை தினமான இன்றும் நாளையும் இந்த தான சாலைகள் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கடந்த ஆண்டு வெசாக் பூரணை காலப் பகுதியில் உணவு மற்றும் தண்ணீர் மூலம் பரவும் நோய்கள் அதிகரித்ததால், இந்த ஆண்டு தான சாலைகளை சுகாதார முறையில் நடத்துமாறு சுகாதாரத் துறையை சார்ந்தவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, "தான சாலைகளில் உணவு வழங்கும் நபர்களின் கைகளில் காயங்கள் ஏதேனும் இருப்பின் அவர்கள் உணவு வழங்குவதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன், உணவு பரிமாறும் போது உரிய சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று தொற்றுநோயியல் பிரிவு மருத்துவ நிபுணர் திலங்க ருவான் பத்திரண நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார். (ஐ)

# பிரபல சிங்கள நடிகை கைது!

கொழும்பு, மே 12

பிரபல சிங்கள நடிகை சேமினி இத்தமல்கொட வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிதி மோசடிகள் தொடர்பில் அவருக்கு எதிராக 7 பிடியாணைகள் நிலுவையில் உள்ள நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மனநலம் பாதிக்கப்பட்டவர் தாக்கியதில் முதியவர் பலி!

கொழும்பு, மே 12

மனநலம் பாதிக்கப்பட்டவர் பொல்லால் தாக்கியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

காலி - நாகொடை - கம்மெத்தேகொடையில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த 83 வயது நபரே உயிரிழந்தார்.

தாக்கியவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# பள்ளத்தில் வீழ்ந்தது பஸ் ஒருவர் பலி; 20 பேர் காயம்!

கொழும்பு, மே 12

வீதியை விட்டு விலகிய தனியார் பேருந்து பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். 20 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

பதுளை - வெலிமடை - டயரபா பகுதியில் இந்த விபத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளையிலிருந்து வெலிமடைக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த 20 பேர் மிரகஹாவத்தை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, வெலிமடை ஆதார மருத்துவமனை, பதுளை போதனா மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, மே 12

வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியின் பின்புறமாக மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

களுத்துறை - தன்வத்தகொடை பகுதியில் அளுத்கம - மத்துகம வீதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், 52 வயது நபர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அகலவத்தை பிரதேசத்தை சேர்ந்தவராவார். விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மின்சார சபையின் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா

கொழும்பு, மே 12

மின்சார கட்டணம் மற்றும் இதர விடயங்களில் வெளியாட்களின் தலையீடு காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்வதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாபிட்டிய மின்சக்தி எரிசக்தி அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

மின்சார கட்டணத்தை 25 முதல் 35 சதவீதம் வரை அதிகரிப்பது குறித்து இலங்கை மின்சார சபை பரிசீலித்தது. இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையமும் இலங்கை மின்சார சபையும் ஒப்புக்கொண்ட சூத்திரத்தின்படி மின்சார கட்டணத்தைத் திருத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், மின்சார கட்டணத்தை திருத்துவதற்கான பேச்சுகள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையிலேயே மின்சார சபையின் தலைவர் தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பியுள்ளார். (ஐ)

# நள்ளிரவில் வீட்டுக்குள் நுழைந்தவர் உலக்கையால் தாக்கப்பட்டு கொலை

கொழும்பு, மே 12

வீட்டுக்குள் நுழைந்தவரை வீட்டின் உரிமையாளர் உலக்கையால் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

பதுளை - ரிதிமாலியத்த - இக்கிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் தாக்குண்டவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மகியங்கனையை சேர்ந்த 28 வயது நபரே உயிரிழந்தவராவார்.

சமுரத்தி அபிவிருத்தி உத்தியோகத்தரே தாக்குதலை நடத்தியுள்ளார். அவரும் அவரின் மனநலம் பாதிக்கப்பட்ட மனைவியும் வீட்டிலிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கதவை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தவர் வீட்டிலிருந்தவரை தாக்க முயன்றார் என்றும் பதிலுக்கு அவர், வீட்டுக்குள் நுழைந்தவரை உலக்கையால் தாக்கினார். இதில், தாக்குண்டவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தாக்கியவரின் மகளுடன் உயிரிழந்தவர் காதல் தொடர்பில் இருந்தார் என்றும் இதனாலேயே அவர் வீட்டுக்குள் நுழைந்தார் என்றும் விசாரணைகளில் தெரிய வந்ததாகக் கூறப்பட்டது.

தாக்குதல் நடத்தியவர் ரிதிமாலியத்த பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். (ஐ)

# அம்ஷிகாவுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் போராட்டம்

## “என் மௌனம் என் குற்றமல்ல - உன் செயல்தான் குற்றம்”




மட்டக்களப்பு, மே 12

“என் மௌனம் என் குற்றமல்ல. உன் செயல் தான் குற்றம்!”- மௌனத்தைக் கலைப்போம் எனும் தொனிப்பொருளில் தமிழ் மாணவி அம்ஷிகாவுக்கு நீதி கோரி மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் உயிர்மாய்த்த அம்ஷிகாவுக்கு ஆத்மசாந்தி வேண்டியும் அவருக்கு நீதி வேண்டியும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டோர் கறுப்புப் பட்டியணிந்து, மெழுகுவர்த்தியேந்தி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது, “பரிதாபம் வேண்டாம் - பாதுகாப்பு வேண்டும், ஒன்றாய் எழுந்தால் சீண்டல் அழியும், தண்டனை இல்லையெனில் குற்றமும் தொடரும், தண்டனை இல்லையென்பதே குற்றவாளியின் தைரியம், என் உடலை உன் உரிமையென எண்ணாதே, அரசின் மௌனம் சீண்டலுக்கான அனுமதிப் பத்திரம்” போன்ற பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத் தினர்.

அம்ஷிகாவுக்கு ஏற்பட்ட நிலைமை இன்னுமொரு மாணவிக்கு ஏற்படுவதற்கு முன்னர் இவ்வாறான செயல்பாடுகளுக்கான சட்ட நடவடிக்கைகள் கடுமையானதாக இருக்க வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருக்கு கையளிப்பதற்கான மகஜரும் வாசிக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# கார் மோதி 2 சிறுவர்களுக்கு காயம்



மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிப்பாளையம் பிரதான வீதியில் பலவான் குடி பக்கமிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த கார் ஒன்று செட்டிப்பாளையம் பிரதான வீதியில் வைத்து துவிச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த 14 வயதான இரு சிறுவர்கள் காயமடைந்ததுடன் செட்டிப்பாளையம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

பின்னர் சிறுவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்தில் காரின் முன் பகுதி சேதமடைந்ததுடன் துவிச்சக்கர வண்டியும் பலத்த சேதமடைந்தது.

இவ் விபத்து சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அன்னையர் தின நிகழ்வு



மட்டக்களப்பு, மே 12

அன்னையர்தினத்தை யொட்டி மட்டக்களப்பு சேன் பாலர் பாடசாலையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு குறித்த பாலர் பாடசாலையில் நடைபெற்றது.

முன்பள்ளியின் அதிபர் திருமதி திலினி குஷானத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டு. கல்வி வலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அனுரேகா விவேகா னந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் பாலர் பாடசாலை பிள்ளைகளின் அன்னையர் தின கலை, கலாசார நிகழ்வுகளுடன், அன்னையர்களுக்கான வினோத உடை, நடை பவனி போன்ற பல விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (எ)

# மீனவர் பிரச்னையை பற்றி யாரும் விளங்கப்படுத்த தேவையில்லை

## ஆதம்பாவா எம். பி. சொல்கிறார்

கல்முனை, மே 12

மீனவனின் பிள்ளையான எனக்கு மீனவர்களின் பிரச்னையை பற்றி யாரும் விளங்கப்படுத்த தேவையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஆழ்கடல் மீனவர் சங்கங்கள், மீனவர் சம்மேளனங்கள், மீனவர் சமாசங்கள், மீனவர்கள் ஆகிய அமைப்புகள் இணைந்து சாய்ந்தமருது மருதூர் சதுக்கத்தில் நேற்று முன்தினம் மாலை நடத்திய மீன் திருட்டை ஒழிப்பது தொடர்பான ஒன்று கூடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் கூறுகையில்,

“தமது பிரச்னைகள் சில தினங்களில் தீராது போனால் மீனவர்கள் வீதிக்கு இறங்கப் போவதாக அறிவித்துள்ளார்கள். அதற்கான சூழ்நிலை உருவாகாது. ஜனாதிபதி, மீன்பிடி அமைச்சர் போன்றோருக்கு இந்த பிரச்னைகளை எடுத்துரைத்து தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன். மீனவர்களின் பிரச்னைகளை தீர்க்க ஆர்ப்பாட்டம் செய்வதை விட அரச தலைவர்களுக்கு பிரச்னையை எடுத்துரைப்பதே சிறந்த தீர்வு.

கடந்த காலங்களில் இருந்த அரசியல்வாதிகள் ஒலுவில் துறைமுகம் பற்றியோ, மீனவர்களின் பிரச்னைகள் பற்றியோ எங்கும் பேசவில்லை. மீனவர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை. நான் பல வருடங்களாக பல்வேறு தரப்பினர்களையும் அணுகி மீனவர்களின் பிரச்னையை தீர்க்க பல்வேறு முயற்சிகளை செய்து கொண்டு தான் இருக்கிறேன்.

மீனவர்கள் போராட்டம் செய்து 10-15 நாட்களுக்குள் தீர்வு பெறலாம் என்று எண்ணுகிறார்கள். அது சாத்தியமில்லை.

அரசாங்கம் அமையப் பெற்று 06 மாதங்களே கடந்துள்ளன. ஜனாதிபதி, உரிய அமைச்சர்கள், உரிய அதிகாரிகளை கொண்டு விரைவில் தீர்வை பெற்றுத் தருவேன். நாங்கள் ஜே.வி.பியை இங்கு அறிமுகம் செய்தபோது யாரும் எங்களை ஆதரிக்கவில்லை. ஆனால், மீனவர்கள் இம்முறை என்னுடன் சேர்ந்து வெற்றிக்காக உழைத்தார்கள். இருந்த போதிலும் நான் தோல்வி அடைந்தேன். கொள்கைகளை மாற்றி ஜனாதிபதி என்னை பாராளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளார்”- என்றார். (எ- 01)

# கடலில் இடம்பெறும் திருட்டை இல்லாதொழிக்க வேண்டும்!

## அம்பாறை மீனவர்கள் அவசர கோரிக்கை



கல்முனை, மே 12

கடலில் இடம்பெறும் திருட்டை இல்லாதொழிக்க சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை மருதூர் சதுக்கத்தில் ஒன்று கூடிய மீனவர்கள் இப்பிரச்னைக்கு உடனடியாக தீர்வுகளைப் பெற்றுத்தர வேண்டும் என்று வலியுறுத்தினர்.

ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் மீன்களை கடலில் வைத்தே திருடும் கும்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பணி மந்தகதியில் இடம்பெறுகிறது. இந்த ஈனச் செயலுக்கு படையினரும் உடந்தையாக செயல்படுகின்றனர். அடிக்கும் இந்தச் செயல்பாட்டை இனியும் அனுமதிக்க முடியாது எனவும் அம்பாறை மாவட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (எ)

# அறுகம்குடா கடற்கரையை அழகுபடுத்திய இராணுவம்

பொத்துவில், மே 12

அறுகம்குடா கடற்கரையை அழகுபடுத்தும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். ஆசியாவின் நான்காவது பெரிய கடற் பாறை அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் அருகம்குடா பகுதியில் அமைந்துள்ளது. நீர் சறுக்கல் உள்ளிட்ட விளையாட்டுக்கு நல்ல சூழல் இருப்பதால், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அறுகம்குடா சுற்றுலாப் பகுதியை அதிகம் விரும்புகிறார்கள்.

அறுகம்குடா சுற்றுலா மண்டலம் விரைவில் திறக்கப்படவுள்ள நிலையில் கடற்கரையை சுத்தம் செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தின் 24ஆவது பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சமிந்த கலப்பத்தியின் வழிநடத்தலில் இராணுவத்தினர் அறுகம்குடா கடற்கரையில் சிரமதானப் பணியைத் தொடங்கினர்.

இதற்காக சுமார் 200 இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர். அதே நேரத்தில் அறுகம்குடா சுற்றுலா பொலிஸார், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொத்துவில் பிரதேச சபை அதிகாரிகளும் இந்த சிரமதானப் பணியில் இணைந்திருந்தனர். இது தவிர அறுகம்குடாவுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (எ- 01)

# 30 நாட்களுக்கு போர் நிறுத்தம்

## நேரடி பேச்சுக்கு வருமாறு உக்ரைக்கு ரஷ்யா அழைப்பு

மொஸ்கோ, மே 12

**போர் நிறுத்தத்தை 30 நாட்களுக்கு நீடிக்க வேண்டுமென ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன. இந்த நிலையில், உக்ரைனுடன் நேரடி பேச்சுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்துள்ளார்.**

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் ஆயிரத்து 172ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் போர் நீடித்து வருகிறது.

இதனிடையே, கடந்த 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை உக்ரைன் மீதான போரை 3 நாட்களுக்கு ரஷ்யா தற்காலிகமாக நிறுத்தியது. இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்ததன் 80ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இந்த தற்காலிக போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டது. இதேவேளை, போர் நிறுத்தத்தை 30 நாட்களுக்கு நீடிக்க வேண்டுமென ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இந்த நிலையில், போர் நிறுத்தம் தொடர்பில் நேரடி பேச்சுக்கு வருமாறு உக்ரைனுக்கு



ரஷ்ய ஜனாதிபதி புடின் அழைப்பு விடுத்துள்ளார். மிகவும் அவசியமான பேச்சுக்கு நாங்கள் தயார். பிரச்னைக்கான காரணங்களை நீக்கவும், அமைதியை நோக்கி செல்வதற்கான வழிமுறைகள் குறித்து பேச்சு நடத்த தயார் என்று புடின் தெரிவித்துள்ளார்.

15ஆம் திகதிக்குள் பேச்சுக்கு வருமாறும், பேச்சுவார்த்தை துருக்கி தலைநகர் அங்காராவில் நடைபெறும் என்றும் புடின் தெரிவித்துள்ளார். (எ)



# ஷேக் ஹசீனா கட்சிக்கு பங்களாதேஷ் அரசு தடை

டாக்கா, மே 12

ஷேக் ஹசீனா கட்சிக்கு பங்களாதேஷ் அரசு தடை விதித்துள்ளது.

அந்த நாட்டின் பிரதமராக ஷேக் ஹசீனா செயல்பட்டு வந்தார். அவர் அவாமி லீக் கட்சியின் தலைவராகவும் செயல்பட்டு வந்தார். ஆனால், ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி கட்சியின் ஆட்சிக்கு எதிராக கடந்த ஆண்டு மாணவர்கள் போராட்டம் வெடித்தது. இதனால், ஆட்சி கவிழ்ந்தது. பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

இதனைத் தொடர்ந்து பங்களாதேஷில் இடைக்கால அரசு பொறுப்பேற்றது. அதன் தலைவராக முகமது யூனுஸ் செயல்பட்டு வருகிறார்.

இதையடுத்து, ஷேக் ஹசீனா கட்சியான அவாமி கட்சியின் மாணவர் அமைப்புக்கு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் பங்களாதேஷ் அரசு தடை விதித்தது. பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாக அவாமி கட்சியின் மாணவர் அமைப்பான பங்களாதேஷ் ஷஸ்ரா லீகிற்கும் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஷேக் ஹசீனாவின் அவாமி கட்சிக்கு முகமது யூனுஸ் தலைமையிலான பங்களாதேஷ் அரசு தடை விதித்துள்ளது. அவாமி கட்சி பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டியே பங்களாதேஷ் இடைக்கால அரசு அவாமி கட்சியை தடை செய்துள்ளது. (எ)

# போர் நிறுத்தம் அமுல் காஷ்மீரில் இயல்புநிலை

புதுடில்லி, மே 12

போர் நிறுத்தத்தால் இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் அமைதி திரும்பியுள்ளது.

காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக இந்தியா, ஒப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் கடந்த 6ஆம் திகதி நள்ளிரவில் பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது அதிரடித் தாக்குதல் நடத்தியது. இதில், பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்த முக்கிய தளபதிகள் உட்பட 100 பேர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து பாகிஸ்தான் இராணுவம், இந்திய நிலைகள் மீது அத்துமீறி தாக்குதலை நடத்தியது. தொடக்கத்தில் காஷ்மீர் மாநில எல்லையோர மாவட்டங்களில் சிறிய ரக பீரங்கி தாக்குதலை நடத்திய பாகிஸ்தான், திடீரென்று ட்ரோன்களை ஏவின. இவை அனைத்தையும் இந்தியா முறியடித்தது. காஷ்மீரை தொடர்ந்து பஞ்சாப், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களிலும் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது.

மோதல் ஒருபக்கம் நடந்து வந்த நேரத்தில் பாகிஸ்தானின் இராணுவ உயர் அதிகாரிகள், இந்திய இராணுவ உயர் அதிகாரிகளுடன் சமரச பேச்சுகள் நடத்தினர். இந்த பேச்சுகளில் உடன்பாடு எட்டப்பட்டு இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். இருநாட்டு தலைவர்களின் அறிவிப்புகளைத் தொடர்ந்து கடந்த 4 நாட்களாக நீடித்து வந்த மோதல் முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில், போர் நிறுத்தத்தால் இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியான ஜம்மு காஷ்மீரில் அமைதி திரும்பி வருகிறது. பதற்றமாக இருந்து வந்த ஜம்மு நகர வீதிகள் அமைதியாக காட்சியளிக்கின்றன.

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் சிவப்பு எச்சரிக்கை நீடித்து வருகிறது. இது தொடர்பில் மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், ”உங்கள் வசதிக்காக மின்சார விநியோகத்தை மீட்டெடுத்துள்ளோம், ஆனால், இன்னும் சிவப்பு எச்சரிக்கையில் தான் இருக்கிறோம். சைரன்கள் ஒலித்துக் கொண்டே இருக்கும். தயவுசெய்து யாரும் வீட்டை விட்டு வெளியில் வர வேண்டாம். ஜன்னல்களுக்கு அருகில் யாரும் நிற்க வேண்டாம். தயவுசெய்து அச்சப்பட வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இந்தியாவுக்கு எதிரான போரில் நாம் வெற்றி பெற்றுவிட்டோம்!

## பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப்

லாகூர், மே 12

இந்தியாவுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுவிட்டோம் என்றும் சிந்து நதி நீர் பங்கீடு, காஷ்மீர் உட்பட அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்படும் என்றும் பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் இடையே கடந்த சில நாட்களாக மோதல் இடம்பெற்று வந்தது. இந்தத் தாக்குதல் முழுமையான போருக்கு வழிவகுக்கும் எனத் தகவல் வெளியானது.

இதனிடையே இந்தியாவும் பாகிஸ்தானும் போர் நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்ததாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் அறிவித்தார். மேலும், இரு நாடுகளும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டன. ஆனால், ஒப்பந்



தத்தை மீறி பாகிஸ்தான் நேற்று முன்தினம் இரவு காஷ்மீர் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தியது. இதனால், இரு நாடுகளுக்கும் இடையே போர்ப் பதற்றம் நீடித்து வருகிறது. இந்த நிலையில்,

பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது, அவர் கூறியதாவது,

“எங்கள் பாதுகாப்புக்காக நாங்கள் எதையும் செய்வோம். மசூதிகள் தாக்கி அழிக்கப்பட்டு அப்பாவிகள் உயிரிழந்தனர். பாகிஸ்தான் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. நமது இராணுவ ரீதியிலான கொள்கைகளில் நாம் வெற்றியடைந்தோம். ஒட்டு மொத்த பாகிஸ்தானும் வெற்றி பெற்றுவிட்டது. இந்தியாவுக்கு எதிராக நாம் வெற்றிபெற்றுவிட்டோம். பாகிஸ்தான் வரலாற்று சிறப்புமிக்க வெற்றிபெற்றுள்ளது. சிந்து நதி நீர் பங்கீடு, காஷ்மீர் உட்பட அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்படும் என்று நம்புகிறேன். எங்கள் நம்பகமான நண்பன் சீனாவுக்கு நன்றி. பாகிஸ்தானுக்கு தேவை ஏற்படும்போது சீனா உதவி செய்கிறது. அவர்களுக்கு நான் மிகப்பெரிய நன்றி கூறிக்கொள்கிறேன்”- என்றார். (எ)

# காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்ய தயார்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், மே 12

காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யத் தயார் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பரிந்துரையில் போர் நிறுத்தம் செய்யப்பட்டதற்கு நன்றி என கூறியுள்ள ட்ரம்ப், இந்தியா மற்றும் பாகிஸ்தானின் சக்தி வாய்ந்த தலைமைகளை நினைத்து பெருமைப்படுகிறேன் எனவும் கூறியுள்ளார். மேலும், இந்தியா - பாகிஸ்தானுடன் வர்த்தகத்தை கணிசமாக அதிகரிக்கப் போவ தாகவும் ட்ரம்ப் தெரிவித்துள் ளார்.

வெள்ளை மாளிகையில்



நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ட்ரம்ப் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# "ரோஹித் சர்மா களத்தில் ஓய்வு பெற தகுதியானவர்"



மும்பை, மே 12

ரோஹித் சர்மா களத்தில் ஓய்வு பெறத் தகுதியானவர் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் மனோஜ் திவாரி கூறியுள்ளார்.

விராட் கோலிக்கு அடுத்து இந்திய கிரிக்கெட் அணியின் 3 வடிவிலான போட்டிகளுக்கும் தலைவராக ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டார். இவரது தலைமையில் இந்திய அணி 2024 ரி - 20 உலகக் கிண்ணம் மற்றும் சமீபத்தில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை வென்றது.

2024 ரி -20 உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர் சர்வதேச ரி - 20 போட்டிகளிலிருந்து ரோஹித் ஓய்வு பெற்றார். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவேன் என அறிவித்திருந்தார். இதனிடையே யாரும் எதிர்பாராத வண்ணம் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக ரோஹித் சர்மா கடந்த 7ஆம் திகதி அறிவித்தார். அவர் தனது சமூக வலைத்தளத்தில் ஓய்வு முடிவை அறிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் வரை ரோஹித் சர்மா அணித் தலைவராக இருப்பார் என்று அனைவரும் நினைத்த வேளையில் அவர் ஓய்வை அறிவித்தது பலரது மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிலையில், இந்திய கிரிக்கெட்டுக்கு சிறப்பாக சேவை செய்த அணித் தலைவருக்கு, சமூக ஊடகப் பதிவுகள் மூலம் அல்லாமல், களத்தில்தான் சரியான பிரியாவிடை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அவர் களத்தில் ஓய்வு பெறத் தகுதியானவர் என்றும் இந்திய அணியின் முன்னாள் வீரர் மனோஜ் திவாரி கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, ரோஹித் சர்மா சமூக ஊடகங்களில் விளையாடாமல், மைதானத்திலேயே ஓய்வு பெற்றிருந்தால், அது மிகவும் பொருத்தமான பிரியாவிடையாக இருந்திருக்கும். அது நம் அனைவருக்கும் சிறப்பாக இருந்திருக்கும்.

அவர் 12 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார், 9 போட்டிகளில் தோல்வி அடைந்துள்ளார், 3 போட்டிகளில் சமன் செய்துள்ளார். எனவே, அவரது வெற்றி விகிதம் குறித்து எந்த சந்தேகமும் இருக்கக்கூடாது- இவ்வாறு திவாரி கூறினார். (எ)



# இத்தாலி ஓபின் ரென்னிஸ் இகா ஸ்வியாடெக் தோல்வி

ரோம், மே 12

இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடரில் நடப்பு சம்பியன் இகா ஸ்வியாடெக் அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளார்.

பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியனான போலந்தின் இகா ஸ்வியாடெக், அமெரிக்காவின் டானியல் காலின்ஸுடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய டானியல் காலின்ஸ் 6-1 மற்றும் 7-5 என்ற நேர் செட் கணக்கில் இகா ஸ்வியாடெக்குக்கு அதிர்ச்சி கொடுத்து, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார். தோல்வியடைந்த இகா ஸ்வியாடெக் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

### இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தம்

# ஐ. பி. எல். போட்டிகள் 15 ஆம் திகதி ஆரம்பம்



புதுடில்லி, மே 12

இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டுள்ளன. இதனால், ஐ. பி. எல். போட்டிகள் மீண்டும் 15 ஆம் திகதி தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்ச் சூழல் காரணமாக நடப்பு ஐ.பி.எல். தொடர் கடந்த 8 ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில் போர் நிறுத்தம் காரணமாக ஐ.பி.எல். போட்டிகள் அடுத்த வாரம் மீண்டும் தொடங்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

வரும் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமை போட்டிகள் தொடங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக பாதியில் நிறுத்தப்பட்ட பஞ்சாப் - டில்லி அணிகளுக்கு இடையேயான லீக் போட்டி மீண்டும் முதலிலிருந்து தொடங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# "சேப்பாக்கத்தில் விளையாடியது மிகவும் அற்புதமாக இருந்தது"

புதுடில்லி, மே 12

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் விளையாடிய அனுபவம் மிகவும் அற்புதமாக இருந்தது என்று சி.எஸ்.கே. வீரர் டெவால்ட் பிரேவிஸ் தெரிவித்தார்.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்றன. இந்தத் தொடர் கடந்த மார்ச் 22ஆம் திகதி தொடங்கியது. இந்த நிலையில், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் நிலவுவதால் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியை ஒருவாரம் நிறுத்தி வைப்பதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்தது.

இந்திய வீரர்களில் பலர் உடனடியாக தங்களது வீடுகளுக்கு திரும்பியதாகவும், வெளிநாட்டு வீரர்களும் விமானம் மூலம் தங்களது நாட்டுக்கு புறப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், ரசிகர்களுக்கு சென்னை வீரர் டெவால்ட் பிரேவிஸ் நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்

சென்னை அணிக்கும், பயிற்சியாளர்களுக்கும், ரசிகர்களுக்கும் மிகப்பெரிய நன்றி. சேப்பாக்கம் மைதானத்தில் விளையாடிய அனுபவம் மிகவும் அற்புதமாக இருந்தது. இந்தியா முழுவதும் இருந்து எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி. இங்கு செலவழித்த நாட்கள் என் மனதிற்கு மிகவும் நெருக்கமானவை. சென்னையில் இருந்த நாட்கள் என் வாழ்நாள் முழுமைக்குமானவை. மீண்டும் விரைவில் உங்களை சந்திக்கிறேன்- என அவர் தெரிவித்துள்ளார். (எ)





# இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக சுப்மன் கில்?

## கோலியின் கோரிக்கை நிராகரிப்பு

புதுடில்லி, மே 12

இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக சுப்மன் கில்லும், துணைத் தலைவராக ரிஷப் பண்ட்டும் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர் விராட் கோலி (வயது- 36). இவர் இந்திய அணிக்காக இதுவரை 123 டெஸ்ட், 302 ஒருநாள் மற்றும் 125 ரி - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இந்திய அணி 2024 ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர் சர்வதேச ரி - 20 கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக விராட் கோலி அறிவித்தார். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவேன் எனவும் கூறியிருந்தார்.

இந்திய அணி அடுத்த மாதம் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்த தொடருக்கான இந்திய அணி ரோஹித் சர்மா தலைமையில் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கடந்த 7ஆம் திகதி டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக ரோஹித் சர்மா அறிவித்தார்.

இதையடுத்து, விராட் கோலியும் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற விருப்பம் தெரிவித்து பி. சி. சி. ஐயிடம் தனது கருத்தை கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், எதிர்வரும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை கருத்தில் கொண்டு ஓய்வு முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு விராட் கோலியிடம் பி.சி.சி.ஐ. வலியுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், ரோஹித் ஓய்வு பெற்றதை அடுத்து இந்திய டெஸ்ட் அணித் தலைவர் பதவியை விராட்



கோலி தனக்கு வழங்கும்படி பி.சி.சி.ஐயிடம் கேட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து 2025 - 2027 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் தொடங்குவதால் அதற்கு புதிய தலைவரை நியமிக்க பி.சி.சி.ஐ முடிவு செய்ததாகவும், இதன் காரணமாக விராட் கோலியின் கோரிக்கையை பி.சி.சி.ஐ நிராகரித்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால்தான் விராட் கோலி சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற விருப்பம் தெரிவித்து பி.சி.சி.ஐயிடம் தனது கருத்தை கூறியுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்திய டெஸ்ட் அணியின் புதிய தலைவராக சுப்மன் கில்லும், துணைத் தலைவராக ரிஷப் பண்ட்டும் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது. (எ)

# இத்தாலி ஓபின் ரென்னிஸ் மேடிசன் கீஸூம் தோல்வி

ரோம், மே 12

இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனையான மேடிசன் கீஸூம் அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளார்.

இத்தாலி ஓபின் சர்வதேச ரென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான மேடிசன் கீஸ், சக நாட்டவரான பெய்டன் ஸ்டெர்ன்ஸ் உடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் 2 செட்களை ஆளுக்கொன்றாக கைப்பற்றினர். இதனால் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக்கொண்டது. இதனையடுத்து மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற 3ஆவது செட்டை பெய்டன் ஸ்டெர்ன்ஸ் கைப்பற்றி கீஸூக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

இறுதியில் பெய்டன் ஸ்டெர்ன்ஸ் 2-6, 6-2 மற்றும் 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். தோல்வியடைந்த மேடிசன் கீஸ் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

## மரணமான...

போக்குவரத்து சபை, காப்புறுதி நிதியம் மூலமாகவும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 100 அடி...

ஏற்பட்ட தூக்கக் கலக்கம் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் அந்தப் பயணி கூறினார். ஏனெனில், பேருந்து பள்ளத்தில் விழுவதற்கு முன்பதாக கடைசிநேரத்தில் சாரதி பிறேக் போட்டார் எனவும் அவர் கூறினார்.

விபத்தின்போது, பேருந்தில் 78 பயணிகள் இருந்தனர் என்று கூறப்படுகிறது. 5 பெண்கள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் சாரதியும் உள்ளடங்குவார். இந்த விபத்தில் காயமடைந்த 57 பேர் உடனடியாக கொத்மலை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 22 பேர் வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்த இடத்தை பார்வையிட்ட சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன ஆகியோர் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினர். அத்துடன், விபத்து தொடர்பில் உடனடியாக விசாரிக்கவும் உத்தரவிட்டனர்.

விபத்து தொடர்பில் விசாரிப்பதற்காக தனியான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதுளை - வெலிமடையில் நேற்றுமுன்தினம் இரவு தனியார் பேருந்து பள்ளத்தில் விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார். 20 பேர் காயங்களுக்கு உள்ளாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழின...

இந்தத் தூபி திறந்து வைக்கப்பட்டது. இதில், கனடா அரசியல்வாதிகள் புலம்பெயர் தமிழர்கள்,கனடா வாழ் மக்கள் எனப் பெருந் தொகையானவர்கள் பங்கேற்றனர்.

இலங்கை இராணுவத்தால் இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு அகவணக்கம் செலுத்தி ஈகைச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர், நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டது.

மே 18 தமிழின் அழிப்பை நினைவு கூரும் விதமாக அமைக்கப்பட்ட இந்த நினைவுத்தூபி அமைக்கும் பணி 2022 ஆம் ஆண்டு பிரம்டன் நகர சபையினால் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விபத்துகளை...

மேற்கண்டவாறு கூறினார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு,

“தற்போதுள்ள சட்டங்களை செயல்படுத்துவதன் மூலமும் சாரதிகளின் மனப்பான்மையை மேம்படுத்துவதன் மூலமும் இவ்வாறான விபத்துகளை கணிசமாகக் குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இதற்காக “தூய இலங்கை” (கிளீன் சிறீ லங்கா) திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இன்று (நேற்று) காலை நடந்த இந்த கொடூரமான வீதி விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க சகல தொடர்புடைய மருத்துவமனைகளையும் தயார்படுத்தவும் இது தொடர்பாக தேவையான அனைத்து எதிர்கால நடவடிக்கைகளையும் எடுக்கவும் படையினருக்கும் சுகாதார துறைக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன் -என்றுள்ளது. (ஐ)

## ரயில்...

இதில், பளை - தம்பகாமத்தை சேர்ந்த 46 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் உறவினர்களிடம் வழங்கப்பட்டது.

இந்த விபத்துக் குறித்து பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## குழந்தையை...

போராடிய தருணம் மனதை உருக்குவதாக பதிவாகி யிருந்தது. எனினும், குழந்தையும் தாயும் மீட்கப்பட்டு நுவரெலியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காப்பாற்றப்பட்ட குழந்தை உடல்நலத்துடன் இருக்கிறது என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனினும், குழந்தையை காப்பாற்ற போராடிய தாய் உயிரிழந்து விட்டார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்னையர் தினமான நேற்று தனது குழந்தையை பேருந்து நசித்துவிடாதவாறு காப்பாற்றுவதற்காக அந்தத் தாய் போராடும் காட்சி பார்ப்போரின் மனதை உருகச்செய்துள்ளது. (ஐ)

## வடக்கு...

குறித்து தேசிய மக்கள் சக்தி பேச்சுகளை முன்னெடுத்து வருகிறது. இது வரையில் முன்னெடுக்கப்பட்ட கலந்து ரையாடல்கள் வெற்றியளித்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் அவரிடம்வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## தமிழ் அரசு...

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சிக்கும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்களுக்கும் இடையே நேற்று சித்தார்த்தனின் இல்லத்தில் சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பு தொடர்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளே இங்குள்ள ஒவ்வொரு சபைகளிலும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதில் எல்லோரும் ஒரே நிலைப்பாட்டில் இருந்தனர். அதிலும், தமிழர் பிரதேசங்களில் தமிழ்க் கட்சியொன்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக இருந்தனர்.

இதற்கமைய தமிழ் அரசுக் கட்சி பல இடங்களிலும் முன்னிலையில் இருந்தாலும் வேறு தமிழ்க் கட்சிகள் முன்னிலையில் இருந்தாலும் தமிழ்த் தேசிய தரப்பு என்ற அடிப்படையில் இவர்கள் ஆட்சி அமைக்கலாம். இதேபோன்று, நாங்களும் முன்னிலையில் இருக்கும் இடங்களில் அதே விட்டுக் கொடுப்புடன் நாங்களும் ஆட்சி அமைப்போம். ஆக தமிழ் அரசுக் கட்சிதான் வடக்கு, கிழக்கில் பல இடங்களிலும் முன்னிலையில் இருக்கிறது.

இதனால், தமிழ்க் கட்சியொன்று ஆட்சியமைக்க வேண்டும் என்பதால் நாங்கள் எங்கள் ஆதரவை வழங்குவோம். இதேபோன்றே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஒரு சில இடங்களில் முன்னிலையில் இருப்பதால் அந்த சபைகளில் அவர்களும் ஆட்சி அமைக்கலாம். அவர்களும் எம்முடன் பேசி இருக்கிறார்கள். அவர்களுடன் தொடர்ந்தும் பேச்சு நடைபெற்று வருகிறது.

இதேவேளை ஜே.வி.பியும் ஒரு சில இடங்களில் ஆட்சி அமைக்க தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. ஆனால், அவர்கள் ஆட்சியை பிடிக்காத வகையில் தமிழர் தரப்பாக நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து, தமிழ்க் கட்சிகளே அங்கும் ஆட்சியமைப்பதை உறுதி செய்ய வேண்டும்-என்றார். (ஐ)

# தமிழின படுகொலை தூபி வரலாற்றில் முக்கிய தருணம்

## கனடா நீதி அமைச்சர் ஹரி

ரொறன்ரோ, மே 12

பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி திறக்கப்பட்டுள்ளமை எங்கள் கூட்டு வரலாற்றில் முக்கியமான ஒரு தருணமாகும் என்று கனடாவின் நீதி அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்



மேலும், இந்த நினைவுத்தூபி இலங்கையில் அரசாங்கத்தால் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையின்போது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழரின் நினைவுச்சின்னமாக விளங்குகிறது. உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் வலிமை மற்றும் மீளெழுச்சி தன்மையை இது கௌரவிக்கிறது. அவர்களின் அர்ப்பணிப்பே இந்த நினைவுத்தூபி உருவாவதற்கான காரணம்.

நான் கனடா பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண், கனடா தமிழர் தேசிய பேரவை, பிரம்டன் தமிழ் சங்கம் ஆகிய தரப்பினருக்கும் எங்கள் கதைகள் ஒருபோதும் மறக்கப்படாமலிருப்பதற்காக போராடியவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நாங்கள் தொடர்ந்தும் நீதிக்காக குரல் கொடுக்கும் அதேவேளை, ஐக்கியப்பட்டவர்களாக - வலிமையானவர்களாக விளங்குவோம் - என்றும் கூறியுள்ளார்.

# வாந்தியெடுத்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 12

கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் பணிபுரியும் சிற்றூழியர் ஒருவர் நேற்று வாந்தி எடுத்து உயிரிழந்தார்.

நீர்வேலி - பூதர்மட ஒழுங்கையை சேர்ந்த குணரத்தினம் குணாதரன் (வயது 41) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்றைய தினம் வாந்தி எடுத்தவரை உறவினர்கள் கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் அங்கு உயிரிழந்தார்.

இதயநோய் காரணமாகவே அவர் உயிரிழந்தார் உடற்கூராய்வு பரிசோதனையில் தெரிய வந்தது.

(ஐ-05)

## தமிழின படுகொலை நடக்கவில்லை...

தெரிவித்தார்.

தமிழின படுகொலை நினைவுத்தூபி அமைப்பதில் எதிர்கொண்ட சிரமங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், “நாங்கள் தமிழர்கள் இனவழிப்பின் அளவை மறக்கக்கூடாது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள், இலங்கை அரசாங்கம் தவறான தகவல்களை பரப்பி வருகிறது.

அவர்கள் உண்மைக்காகவும் நீதிக்காகவும் குரல் கொடுத்த தமிழர்களை இழிவுபடுத்தவும் தாக்கவும் முயன்றனர். இது ஓர் உடல்ரீதியான இனப்படுகொலை மாத்திரமல்ல. உலகின் அனைத்து பகுதிகளிலுமுள்ள தமிழர்கள் மீதான தாக்குதல். தமிழர் படுகொலை நினைவுதூபி என்று நகரத்தில் உருவாகியுள்ளமை குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன். ஆனால், இன்னமும் செய்யவேண்டிய பணிகள் உள்ளன - என்றும் கூறினார். (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

2006ஆம் ஆண்டு ஆரம்பமான வன்னி இறுதிப் போரில் தமிழ் மக்கள் வகைதொகையின்றி கொல்லப்பட்டார்கள். போர் நடந்த பகுதிகளில் மருந்துகளுக்கும் உணவுக்கும் குழந்தைகளின் பால்மாவுக்கும்கூட தடை விதிக்கப்பட்டது. இதனாலும், பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தார்கள்.

இறுதிப்போர் உச்சமடைந்திருந்த மே மாதத்தில் சுமார் ஒன்றரை சதுர கிலோமீற்றர் பரப்புக்குள் மூன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சிக்குண்டார்கள். இந்தப் பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் தினமும் பல நூறு பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். தமிழ் மக்கள்மீதான இந்த அழிப்பை நினைவுகூரும்விதமாக போர் முடிவுக்கு வந்த மே 18ஆம் நாள் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரத்தை உலகம் எங்கும் வாழும் தமிழ் மக்கள் கடைப்பிடிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பயங்கரவாத...

நீக்கவும் அதற்கு பதிலாக புதிய சட் டம் ஒன்றை நிறைவேற்றவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன், நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை முழுமையாக நீக்காது திருத்தங்களை கொண்டுவரவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடை சட்டம் போர்க் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் வகைதொகையின்றி தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகினர். இந்த நிலையில், போர் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்த நிலையிலும் பயங்கரவாத தடை சட்டம் நடைமுறையிலுள்ளது.

நடைமுறையிலுள்ள பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக பலரும் குரல் கொடுத்த போதிலும் இது நீக்கப்படவில்லை. இந்த நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கைக்கு அளிப்பதற்கு பயங்கரவாத தடை சட்டத்தை நீக்க வலியுறுத்தியிருந்தது.

அண்மையில் நாட்டுக்கு வருகை தந்த ஐரோப்பிய ஒன்றிய ஜி. எஸ். பி. பிளஸ் கண்காணிப்பு குழுவும் இந்த சட்டத்தின் நீக்கம் தொடர்பில் பேசியிருந்தது. இந்த நிலையிலேயே பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதற்கு தற்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனிடையே, நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடை சட்டத்துக்கு எதிராக தற்போது ஆட்சியிலுள்ள கட்சி பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தது. அத்துடன், தாம் ஆட்சி அமைத்ததும் இந்த சட்டத்தை நீக்குவோம் என்றும் வாக்குறுதி அளித்தது. எனினும், இந்த சட்டத்தை தற்போதைய அரசாங்கமும் பயன்படுத்தியதுடன், இதனை நீக்கவும் தயக்கம் காட்டி வருகிறது. இது, உள்நாட்டிலும் சர்வதேசதிலும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பையும் உருவாக்கியுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஓமந்தை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, மே 12

கெப் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

ஏ-9 நெடுஞ்சாலையில் - ஓமந்தையில் இடம்பெற்ற இந்த விபத்தில் 32 வயது நபரே உயிரிழந்தார். இவர் அதே இடத்தைச் சேர்ந்தவராவார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

ஓமந்தையிலிருந்து வவு னியா நோக்கி வந்த கெப் வாகனம் எதிரே வந்த மோட் டார் சைக்கிளை மோதியது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந் தார்.

படுகாயமடைந்தவர் வவுனியா பொது மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந் தார். கெப் வாகன சாரதியை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# நாட்டின் நிலம், வான், கடலை பயன்படுத்த அனுமதியில்லை!

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, மே 12

இலங்கையின் வான், நிலம், கடல் பரப்பை எந்தவொரு நாடும் பயன்படுத்த இடமளிக்க மாட்டோம் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்தாலும் இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் போக்கே தொடர்ந்தும் நீடிக்கிறது. இந்த நிலையிலேயே அரசாங்கத்தின் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், உலகளாவிய பயங்கரவாத செயல்பாடுகளை இலங்கை அனுமதிக்காது. பயங்கரவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவும் போவதுமில்லை. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்குவோம். பிராந்தியத்தின் நிலையான அமைதி மற்றும் மக்களின் பாதுகாப்பு என்பன எமக்கு முக்கியமாகும். இந்திய - பாகிஸ்தான் மோதலினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய சவால்கள் குறித்து கருத்தில் கொண்டுள்ளோம்.

இந்த இரு தரப்பு கடும் மோதல்களால் இந்திய பெருங்கடலின் அமைதி மற்றும் தெற்காசிய அரசியல் மற்றும் பொருளாதார தாக்கங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. பிராந்திய நாடுகள் என்ற ரீதியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுமே இலங்கைக்கு பல்வேறு வழிகளில் உதவிகளை செய்துள்ளன. இரு நாடுகளுடனுமே சிறந்த இராஜதந்திர உறவுகள் உள்ளன. இருப்பினும், ஒரு நாட்டுக்கு எதிராக இலங்கையின் நிலப் பரப்பு, கடல், வான் பரப்பை பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படாது - என்றார். (ஐ)

# ஐ. தே. க. ஆதரவை மறுக்கிறார் சஜித்?

கொழும்பு, மே 12

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ரணிலின் ஆதரவை பெற விரும்பாததால் கொழும்பு மாநகர சபையில் அந்தக் கட்சி ஆட்சியமைக்க முடியாது போகும் என்று கூறப்படுகிறது.

கடந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி 48 ஆசனங்களை பெற்றுள்ளது. எதிர்க்கட்சிகள் 69 ஆசனங்களை கைப்பற்றின.

எவருக்கும் அறுதிப் பெரும்பான்மை இன்மையால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தால் கொழும்பு மாநகரில் ஆட்சி அமைப்பது சாத்தியம் என்று கூறப்பட்டது. இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு மாநகர சபை அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பினால் ஆதரவு தரத் தயார் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்திருந்தது.

எனினும், ஐ. தே. கவின் ஆதரவை பெற சஜித் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்க சந்தர்ப்பம் உள்ளதாகக் கூறப்படுகிறது. (ஐ)

# எங்களின் பிராந்தியத்தை இந்தியா வழிநடத்த வேண்டும்!

## முன்னாள் ஜனாதிபதி ரணில்




பெங்களூரு, மே 12

**இந்தியா எமது பிராந்தியத்தை வழிநடத்த வேண்டும். இலங்கையின் உள்நாட்டு போரின் போதும் தேசிய பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையை நோக்கியே சென்றது. எனவே, மோதல்கள் ஒரு நாட்டின் வளர்ச்சியை பாதித்துவிடக் கூடாது - என்று கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

இந்தியாவுக்கு சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தி இந்து நாளிதழின் பெங்களூர் பதிப்பு தொடர்பான நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தியப் பெருங்கடலை சுற்றியுள்ள மிகப்பெரிய மக்கள் தொகை நாடாக இந்தியா உள்ளது. இது ஒரு முக்கோண உலகம் அதில், நாம் நமது பகுதியை கையாள்கிறோம். மேற்குலக நாடுகள் அமெரிக்காவால் வழிநடத்தப்படுகின்றன. கிழக்கு ஆசியா சீனாவால் வழிநடத்தப்படுகிறது. மேலும் இந்தியா எமது பிராந்தியத்தை வழிநடத்த வேண்டும். இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான நெருக்கடியான நிலைமை தோன்றியுள்ளது. இத்தகைய மோதல்கள் ஊடாக ஏற்பட கூடிய பொருளாதார நெருக்கடி மற்றும் தொழிலின்மையை கருத்தில் கொள்ளவில்லை என்றால் பங்களாஷூக்கு ஏற்பட்ட நிலைமை பாகிஸ்தானுக்கும் ஏற்படலாம்.

மறுபுறம் பாகிஸ்தானால் குண்டுவீசப்பட வாய்ப்புள்ள இந்தியாவில் முதலீடு செய்ய வேண்டுமா என்று அமெரிக்க முதலீட்டாளர்கள் சிந்தித்து வருகின்றனர். எவ்வாறாயினும் உள்நாட்டு போரின்போது இலங்கை பொருளாதார வளர்ச்சியை அடைந்தது. ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதம் முடிவுக்கு வர வேண்டும். ஆனால், ஏனைய பகுதிகளிலும் பயங்கரவாதத்தை அழிக்க முடியும் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது. எவ்வாறாயினும் மோதல் ஒரு நாட்டின் வளர்ச்சியை தடுத்து விடக்கூடாது.

நாம் ஏன் எமது பிராந்தியத்தை ஒரு துணைக்கண்டம் என்று அழைக்கிறோம்? "நாம் ஏன் நம்மை ஒரு துணைக் கண்டம் என்று அழைக்கிறோம்? தெற்காசியா என்று ஏன் அழைக்கப்படுகிறோம்? அந்த வார்த்தை அமெரிக்க வெளிவிவகார துறையிலிருந்து வந்துள்ளது. இரண்டாம் உலகப் போரில் இரு முனையாக இருந்த நாம் பனிப் போரின் போது மும்முனையாக மாறினோம். பின்னர் சோவியத் யூனியனுடன் ஒரு முனையாக மாறினோம். ஆனால், தற்போது சீனா, அமெரிக்கா, ஐரோப்பாவுடன் மும்முனையாக மாற முடியுமா? என்றும் கூறினார். (ஐ)

கொழும்பு மாநகர சபை:

# சஜித் தரப்பை ஆதரிக்கும் முடிவு இன்னமும் இல்லை!

## பொதுஜன பெரமுன கட்சி தெரிவிப்பு



கொழும்பு, மே 12

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்காக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதர வளிப்பது குறித்து இதுவரையில் தீர்மானம் எடுக்கவில்லை. எதிர்வரும் வாரம் உத்தியோகபூர்வமான அறி விப்பை விடுப்போம் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி விடுத்த கோரிக்கை தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், பொய் மற்றும் வெறுப்பால் உண்மையை தொடர்ந்து மறைக்க முடியாது என்பதற்கு வெளியாகியுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் முடிவுகள் சிறந்த முடிவாகும். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க எதிர்க்கட்சியில் இருக்கும்போது கடந்த அரசாங்கங்கள் சாபம் என்று விமர்சித்தார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்கள்மீது பெரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். குறுகிய அரசியல் வெற்றிக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியினர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை சட்டத்தின் முன் நிரூபிக்க வேண்டும். இதற்கு மக்கள் சிறந்த வாய்ப்பை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளார்கள்.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்காக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பது குறித்து இதுவரையில் தீர்மானம் எடுக்கவில்லை. அரசியல் குழு கூட்டத்தில் இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இருப்பினும், இறுதி தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை. கட்சியின் அரசியல்குழு கூட்டம் எதிர்வரும் வாரம் கூடவுள்ளது. இதன்போது, எடுக்கப்படும் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். இந்த விடயம் குறித்து கட்சியின் ஆதரவாளர்களின் நிலைப்பாட்டை கோரவுள்ளோம் - என்றார். (ஐ)

# மின்சார கட்டண அதிகரிப்பை உடனடியாக நிறுத்தவேண்டும்!

## எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்து



கொழும்பு, மே 12

25 முதல் 30 சதவீதம் வரையான அளவில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்துகிறோம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டண அதிகரிப்பு தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இலங்கையின் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை மறுபரிசீலனை செய்வதாக மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து, முந்தைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கைகளை அப்படியே செயல்படுத்துவதன் விளைவாக இப்படி மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த ஆண்டு இலாபம் ஈட்டிய இலங்கை மின்சார சபை பெப்ரவரி மாதம் முதல் 27 ஆயிரத்து 110 கோடி ரூபாய் நட்டமடைந்துள்ளதாகக் கூறி அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறி செயல்படவுள்ளது.

மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக அனைவரையும் ஒன்றிணைத்து இந்த நாட்டின் மின்சார நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க நாம் உறுதிபூண்டுள்ளோம் - என்றுள்ளது.

# பாதாள உலகக் குழுவை சேர்ந்த 10 பிரபலங்கள் விரைவில் கைது

கொழும்பு, மே 12

நாட்டை விட்டு தப்பிச் சென்ற 10 பிரபல பாதாள உலக குழுவினரை விரைவாகக் கைது செய்ய சர்வதேச நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அண்மையில் நடந்த கொலைகள் பலவற்றின் பின்னணியில் அவர்கள் இருப்பதால் இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளிலுள்ள பாதாள உலகக் குழுவினரின் உண்மையான கடவுச்சீட்டுகள், போலி கடவுச்சீட்டுகள் தற்போது பெறப்பட்டுள்ளன. சர்வதேச உளவாளிகள் மூலம் அவர்கள் பற்றிய தகவல்கள் பெறப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.